## சாதாரண கூட்டம்

2024–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 30–ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண் 1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் டிசம்பர் 2024 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.1554/2014/சி1**

**தீர்மான எண்.247 நாள்.30.12..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண் 2**

பள்ளிபாளையம் நகராட்சியில் டிசம்பர் 2024 மாதம் 26.12.2024 ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 2.94 | 260.89 | 2.94 | 133.80 | 0 | 127.09 |
| 2. | காலியிட வரி | 2.35 | 4.46 | 2.35 | 2.17 | 0 | 2.29 |
| 3. | தொழில்வரி | 0.88 | 18.55 | 0.88 | 8.49 | 0 | 10.06 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 0 | 71.85 | 0 | 38.18 | 0 | 33.67 |
| 5 | வரியில்லா இனம் | 0 | 18.29 | 0 | 9.72 | 0 | 8.57 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0 | 51.43 | 0 | 28.13 | 0 | 23.30 |
| | மொத்தம் | 6.17 | 425.46 | 6.17 | 220.48 | 0 | 204.98 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

கோப்பு எண்.1523/2013/அ1

**தீர்மான எண்.248 நாள்.30.12..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண் 3**

நகராட்சி வருவாய் நிதி மூலதன கணக்கில் 4612001 நீண்ட காலமாக கீழ்க்காணும் படி ஈடுசெய்யப்படமால் உள்ள முன்பணம் நிலுவை தொகை

ரு. 184663/-இந்நகராட்சி பேருராட்சியாக இருந்த காலத்திலிருந்து நிலுவையாக இருந்து இந்த முன்பணத்தொகையினை ஆறு ஆண்டுகளுக்கு மேலாகி சட்ட ரீதியாக வசூலிக்க இயலாதபடியால் அந்த தொகையினை பொது நிதி செலவினமாக அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வருடம் | முன் பணத்தொகை 4612001 |
|---|---|---|
| 1 | 1970 –1971 | 91.71 |
| 2 | 1974– 1975 | 109.40 |
| 3 | 1977– 1978 | 5075.61 |
| 4 | 1980– 1981 | 750.30 |
| 5 | 1984 –1985 | 786.80 |
| 6 | 1985 –1986 | 219.98 |
| 7 | 1986 –1987 | 915.00 |
| 8 | 1987– 1988 | 28677.05 |
| 9 | 1988 –1989 | 15579.75 |
| 10 | 1989 –1990 | 10441.00 |
| 11 | 1990– 1991 | 12929.00 |
| 12 | 1991–1992 | 22182.00 |
| 13 | 1994 –1995 | 34660.00 |
| 14 | 1995 1996 | 3645.00 |
| 15 | 1998 1999 | 48600.00 |
| மொத்தம் | | 184662.60 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண். 1625 / 2024/எச்1

**தீர்மான எண்.249 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண் .4</u>**

நகராட்சி வருவாய் நிதி மூலதன கணக்கில் 4604002 நீண்ட காலமாக கீழ்க்காணும் படி ஈடுசெய்யப்படமால் உள்ள முன்பணம் நிலுவை தொகை ரு.100983/-இந்நகராட்சி பேருராட்சியாக இருந்த காலத்திலிருந்து நிலுவையாக இருந்து இந்த முன்பணத்தொகையினை ஆறு ஆண்டுகளுக்கு மேலாகி சட்ட ரீதியாக வசூலிக்க இயலாதபடியால் அந்த தொகையினை பொது நிதி செலவினமாக அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | திட்டம் | நிலுவைத் தொகை (வட்டி தவிர) ரூ |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.கந்தசாமி | தன்னிறைவு திட்டத்தில் ஆரம்ப பாட சாலை அருகில் கல்வெட்டு கட்டியது முன்பணம் | 10158 |
| 2. | திரு.எம்.இராமசாமி | தன்னிறைவு திட்டத்தில் அங்கமுத்து முதலியார் வீடு அருகில் சாக்கடை கட்டியது முன்பணம் | 17434 |
| 3. | திரு.ஆர்.முத்துசாமி | தன்னிறைவு திட்டத்தில் பெஞ்சா கவுண்டர் வீடு அருகில் சாக்கடை கட்டியது முன்பணம் | 31696 |
| 4. | திரு.எம்.ராமசாமி | தன்னிறைவு திட்டத்தில் அங்கமுத்து முதலியார் வீடு அருகில் சாக்கடை கட்டியது முன்பணம் | 22969 |
| 5, | திரு.பி.முத்துசாமி | தன்னிறைவு திட்டத்தில் காந்திபுரம் 18 அடி கிராஸ் ரோடு கட்டி யது முன்பணம் | 14686 |
| 6. | திரு.பி.முத்துசாமி | தன்னிறைவு திட்டத்தில் காந்திபுரம் 18 அடி கிராஸ் ரோடு கட்டியது முன்பணம் | 4040 |
| | | மொத்தம் | **100983** |

**அலுவலக குறிப்பு**

மன்றன் அனுமதிக்கலாம்

கோப்பு எண். 1625 / 2024/எச்1

**தீர்மான எண்.250 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.5</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்க்கு கடந்த 2016 ம் ஆண்டு முதல் 2020 ம் ஆண்டு வரை முடிய கொள்முதல் செய்யப்பட்ட தடவாள சாமான்கள் மற்றும் கிருமிநாசினி மருந்துகளுக்கு செலுத்தப்பட்ட வைப்புதொகை வழங்கும் படி ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன் ஒப்பந்ததாரரால் உரிய கடிதம் வழங்கப்பட்டுள்ளது.அதன்அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு வைப்புத்தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **செலுத்தப்பட்ட வைப்பு தொகை** | **பற்றுசீட்டு எண்** | **நாள்** |
|---|---|---|---|---|
| 1 | புகைபோக்கி இயந்திரம் சப்ளை செய்தல் | 2250 | 052/01/16–17/0007004 | 29.11.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | 1538 | 052/01/16-17/0007005 | 22.03.2018 |
| 3 | நீர்த்த சுண்ணாம்பு தூள் சப்ளை செய்தல் | 2100 | 052/01/16-17/0007006 | 22.03.2018 |
| 4 | லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்தல் | 4650 | 052/01/16-17/0007007 | 29.07.2019 |
| 5 | தளவாட சாமான்கள் கொள்முதல் செய்தல் | 1750 | 052/01/16-17/0007008 | 29.07.2019 |
| 6 | கை புகைபோக்கி இயந்திரம் மற்றும் சிலிண்டர் சப்ளை செய்தல் | 1000 | 052/01/16-17/0007009 | 15.11.2019 |
| 7 | தளவாட சாமான்கள் கொள்முதல் செய்தல் | 3200 | 052/01/16-17/0007010 | 15.11.2019 |
| 8 | லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்தல் | 4800 | 052/01/16-17/0007011 | 10.01.2020 |
| **மொத்தம்** | | **21288** | | |

மேற்காணும் வைப்பு தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 1584/2024/எச்1

**தீர்மான எண்.251 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்க்கு கடந்த 2016 ம் ஆண்டு முதல் 2020 ம் ஆண்டு வரை முடிய கொள்முதல் செய்யப்பட்ட தடவாள சாமான்கள் மற்றும் கிருமிநாசினி மருந்துகளுக்கு செலுத்தப்பட்ட வைப்புதொகை வழங்கும் படி ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் ஒப்பந்ததாரரால் உரிய கடிதம் வழங்கப்பட்டுள்ளது.அதன்அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு வைப்புத் தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | செலுத்தப்பட்ட வைப்பு தொகை | பற்றுசீட்டு எண் | நாள் |
|---|---|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் | 6136 | 052/01/2/17-18/0021712 | 15.03.2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | கருப்பு பெனாயில் சப்ளை செய்தல் | 5522 | 052/01/2/17–18/0021713 | 15.03.2018 |
| 3 | தளவாட சாமான்கள் கொள்முதல் செய்தல் | 3200 | 052/01/2/17–18/0021714 | 15.11.2019 |
| 4 | புகைபோக்கிக்கு தெவையான கேஸ் சிலிண்டர் சப்ளை செய்தல் | 1000 | 052/01/2/17–18/0021715 | 15.11.2019 |
| 5 | பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் | 6400 | 052/01/2/17–18/0021716 | 28.02.2019 |
| 6 | கருப்பு பெனாயில் சப்ளை செய்தல் | 6660 | 052/01/2/17–18/0021717 | 28.02.2019 |
| 7 | நீர்த்த சுண்ணாம்பு தூள் சப்ளை செய்தல் | 8450 | 052/01/2/17–18/0021718 | 28.02.2019 |
| 8 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்தல் | 4800 | 052/01/2/17–18/0021719 | 10.01.2020 |
| மொத்தம் | | **42168** | | |

மேற்காணும் வைப்பு தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1584/2024/எச்1

**தீர்மான எண்.252 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.7</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியில் வசூலிக்கப்பட்டு வரும் சொத்து வரி , நடைமுறையில் உள்ள நகராட்சி விதிமுறைகளின் படி பொதுநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி என பிரித்து கீழ்கண்டுள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 124 நாள். 31.03. 2017 இன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது .

| | |
|---|---|
| பொது காரியங்களுக்கான வரி | 4 % |
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 7 % |
| கல்வி வரி | 2.50 % |
| மொத்தம் | 13.50 % |

தற்போது இந்நகராட்சியில் பொது நிதியில் பணியாளர்களின் ஊதியம், ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் , டீசல் பில் , மின்வாரிய கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள பொதுநிதியில் வருவாய் பற்றாக்குறையாக இருப்பதால் கீழ்கண்டுள்ளவாறு திருத்திய வரிவிதிப்பு சதவீதம் நிர்ணயம் செய்யவும் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளை தற்போது உள்ள மைய

இணைய வழி மென் பொருள் (Centralised Web Based Software) இல் பதிவேற்றம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .

| | |
|---|---|
| பொது காரியங்களுக்கான வரி | 6.25 % |
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 4.75 % |
| கல்வி வரி | 2.50 % |
| மொத்தம் | 13.50 % |

**அலுவலக குறிப்பு**

விதி முறைகளின் படி மேற்கண்டுள்ள தலைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட திருத்திய வரிவிதிப்பு சதவீதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண்.1624/2024/அ1

**தீர்மான எண்.253 நாள்.30.12..2024.**

ஒப்புதலுக்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.8</u>**

நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் சுற்றிதிரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி தடுப்பூசி செலுத்தும் திட்டத்திற்கு 27.11.2024 – ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யபட்டதில் 20.12.2024– ந் தேதி கிழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கிழ்கண்டுள்ளவாறு

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளிகள்வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **1 நாயினை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ARV செலுத்தும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.பை** | **சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | M/s.POULOSE ANIMAL RESCUE AND WELFARE TRUST, No.1/12,Ground Floor, Round Building, Collector Nagar, Anna Nagar west, Chennai – 101. | **ரூ.1680/–** | **அதிகம்** |
| 2 | M/s.PET CARE FOUNDATION, No.2/3 D-Type, First Floor, 16th street, Sidco Nagar, Villivakkam, Chennai – 49 | **ரூ.1640/–** | **குறைவு** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் காணும் M/s.PET CARE FOUNDATION, CHEENNAI -49 என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்குவது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1111/2012/எச்1

**தீர்மான எண்.254 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சாலையில் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மேம்பாட்டு திட்டம் அம்ரூத் 2.0 ன் கீழ் பதிக்கப்பட்டுள்ள HDPE குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் குடிநீர் கசிவுகளை சரிசெய்து அப்பகுதியில் சாலைகளை சீரமைத்து தரும்படி நெடுஞ்சாலைத்துறையினர் தொடர்ந்து கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் உத்திரவின் படியும், இப்பணியினை மேற்கொள்வது அவசியமாகும். எனவே, இப்பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 5,90,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1). மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணிக்கு குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

கோப்பு எண். 1447 /2024/இ1

**தீர்மான எண்.255 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

பள்ளிபாளையம் நகராட்சி குடிநீர் நிதி திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 29.11.2024ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீத |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் நிதி 2024-25<br>சென்னை கன்னியாகுமரி திட்ட சாலையில் பதிக்கப்பட்டுள்ள HDPE குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது மற்றும் சாலை சீரமைப்பு பணிகள் | 5,90,000 | M/s ஆர்.முத்துசாமி & கோ<br>1/56 ஜி, ஏ.எஸ்.டி.பெட்ரோல் பங்க் அருகில்,<br>ஈரோடு பவானி சாலை,<br>சங்ககிரி. | 0.26% குறைவு |
| | | | M/s. R.S.R. கன்ஸ்ட்ரக்ஷன்<br>77/1, கீழ் திண்டல்,<br>கடுத்தன்காட்டு தோட்டம்,<br>வி.ஐ.பி.நகர் அருகில், ஈரோடு. | 1.12% உயர்வு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.26% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள் M/s ஆர்.முத்துசாமி & கோ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 1447/2024/இ1

**தீர்மான எண்.256 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண்.11

பள்ளிபாளையம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 23.10.2024ம் தேதி புதன்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீத |
|---|---|---|---|---|
| 1 | <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25</u> பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 11 மாதாபுரம் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் | 9,80,000/- | M/s ஆர்.முத்துசாமி & கோ 1/56 ஜி, ஏ.எஸ்.டி.பெட்ரோல் பங்க் அருகில், ஈரோடு பவானி சாலை, சங்ககிரி. | 0.05% குறைவு |
| | | | M/s.J.V & Co 378, சாமியார்காடு, சங்ககிரி,சேலம். | 2.26% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள் M/s ஆர்.முத்துசாமி & கோ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.872/2024/இ1

**தீர்மான எண்.257 நாள்.30.12..2024.**

பதிவுசெய்யப்பட்டது

<u>பொருள் எண்.12</u>

பள்ளிபாளையம் நகராட்சி 15 மத்திய நிதிக்குழு மானியம் Tied Grant 2023-24 ன் கீழ்கண்ட பணிக்கு 06.12.2024ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>Tied Grant 2023-24</u>** பள்ளிபாளையம் நகராட்சியின் அக்ரஹாரம் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக Pre-Chlorination Plant அமைக்கும் பணி | 7,14,000/- | M/s I TECH SYSTEM 401, சக்தி நகர், கவுண்டச்சிபாளையம் வெள்ளோடு , ஈரோடு | 1.44% குறைவு |
| | | | M/s SHRINIKETHA ENTERPRISES 65/1,பேட்டைகாடுஅருகில் சென்த்டே பள்ளி அருகில் பைபாஸ் ரோடு, சித்தோடு | 0.65% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 1.44% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s I TECH SYSTEM, வெள்ளோடு ஈரோடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 647/2024/இ1

**தீர்மான எண்.258 நாள்.30.12..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.13**

பள்ளிபாளையம் நகராட்சி 15மத்திய நிதிக்குழு மானியம் Untied Grant **2023–24** ன் கீழ்கண்ட பணிக்கு 06.12.2024ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **Untied Grant 2023–24** வார்டு எண்.15 பழைய போலீஸ் ஸ்டேசன் வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 4,70,000/- | M/s.VNP வைண்டிங் அன் டிரன்ஸ், , காந்திபுரம் முதல் தெரு, பள்ளிபாளையம் | 0.04% குறைவு |
| | | | திரு.கே.எஸ்.மாரியப்பன், 716பி,குதிரைகலமேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.21% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s. VNP வைண்டிங் அன் டிரன்ஸ், பள்ளிபாளையம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.647/2024/இ1

**தீர்மான எண்.259 நாள்.30.12..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.14**

பள்ளிபாளையம் நகராட்சி 15மத்திய நிதிக்குழு மானியம் Untied Grant **2023–24** ன் கீழ்கண்ட பணிக்கு 06.12.2024ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **Untied Grant 2023–24** வார்டு எண்.18 மீனவர் | 5,07,000/- | M/s. சக்தி அசோசியேட்ஸ், 97எ, ஊஞ்சப்பாளையம், பூதபாடி, பவானி. | 0.08% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரு பகுதியில் அமைந்துள்ள மயானத்திற்கு சுற்றுசுவர் அமைக்கும் பணி | | M/s. எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5-6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.29% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.08% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s. சக்தி அசோசியேட்ஸ், பவானி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.647/2024/இ1

**தீர்மான எண்.260 நாள்.30.12..2024.**

பதிவுசெய்யப்பட்டது

## பொருள் எண்.15

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான துவக்கப்பள்ளி கண்டிப்புதூர் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இதில் சுமார் 320 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஆண்டு தோறும் நடத்தப்படும் கலைநிகழ்ச்சிக்கு என கலையரங்க மேடை (Stage) ஒன்று சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இக்கலையரங்கம் கட்டப்பட்டு நீண்ட காலமாகிவிட்டதால், பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, மாணவ, மாணவிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு பழுதடைந்த நிலையில் உள்ள கலையரங்கத்தினை பராமரிப்பு செய்து பயன்பாட்டில் வைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,20,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட செலவினத்தை கல்விநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1611/2024/இ1

**தீர்மான எண்.261 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண்.16

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆவாரங்காடு மற்றும் கோட்டக்காடு பகுதியில் இரண்டு நுண்உர செயலாக்க மையங்களின் மூலம் மக்கும் குப்பைகள் அரைக்கப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு நுண்உர செயலாக்க மைங்களில் உள்ள குப்பைகளை அரைக்கும் இயந்திரங்களில் (Shredding Machine) பழுது ஏற்படுவதால், நகராட்சிப் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் அரைக்க இயலாமல், தேங்கிவிடும் நிலை ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட இரண்டு நுண்உர செயலாக்க மையங்களில் உள்ள (Shredding Machine) ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து உபயோகப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1605/2024/இ1

**தீர்மான எண்.262 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆவாரங்காடு பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை அருகில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் இருந்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் பொதுமக்களுக்கு குடிநீரல்லாத தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி சின்டெக்ஸ் பழுதடைந்து குடிநீர் கசிவு ஏற்பட்டு வருவதுடன் பயன்பாடற்ற நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள அடித்தளத்துடன் கூடிய சின்டெக்ஸ் டேங்கினை அப்புறப்படுத்தி சாலையினை விரிவுபடுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1615/2024/இ1

**தீர்மான எண்.263 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 பெரியார் நகர் முதல் வீதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் மேற்கண்ட நீர்த்தேக்கத் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1608/2024/இ1

**தீர்மான எண்.264 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்..19**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான துவக்கப்பள்ளி ஆவாரங்காடு பகுதியில் செயல்பட்டு வருகிறது. இதில் சுமார் 400 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஆண்டு தோறும் நடத்தப்படும் கலைநிகழ்ச்சிக்கு என தனியாக கலையரங்க மேடை (Stage) இல்லாத காரணத்தினால் பள்ளியின் வளாகத்தின் உள்ளே புதியதாக கலையரங்க மேடை கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.7,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட செலவினத்தை கல்விநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1610/2024/இ1

**தீர்மான எண்.265 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.20</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அக்ரஹாரம் பகுதியில் கட்டப்பட்டு, பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கடந்த 2014 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நிலையில் தற்போது வரை பராமரிப்பு பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக விரைவு மணல் வடிப்பான்களுக்கு வைக்கப்பட்டுள்ள வால்வுகளில் பழுதுகள், தொட்டிகளுக்கான மூடி மற்றும் மோட்டார் பழுதுகளை சரிசெய்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1612/2024/இ1

**தீர்மான எண்.266 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.21</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 காமராஜ் நகர் அருகில் புதியதாக தெருவிளக்கு அமைத்து ஒருமுனை மின்இணைப்பு பெறுவதற்கான கேட்புத் தொகை ரூ.18470/— தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் வரப்பெற்றதை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணிக்கு தொகையினை பொதுநிதியில் இருந்து செலுத்துவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1076/2014/இ1

**தீர்மான எண்.267 நாள்.30.12..2024.**

அனுமதிக்கப்பட்டது

**(ஓம்) மோ.செல்வராஜ்,**
**தலைவர்,**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**